ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2165/73 - 2020 මාර්තු මස 07 වැනි සෙනසුරාදා - 2020.03.07

*2165/73 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 07 ஆந் திகதி சனிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டம்*

*2 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

*2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ்,* எனக்குரித்தளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் இதற்கான அட்டவணையின் I ஆம் நிரலில் குறித்துரைக்கப்படும் வியாபாரப் பண்ட இனம் தொடர்பில், அவ்வட்டவணையின் II ஆம் நிரலிலுள்ள நேரொத்த பதிவீடுகளில் குறித்துரைக்கப்படும் வீதங்களில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றை விதிக்கின்றேன்.

இக்கட்டளை 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதியிலிருந்து ஆரம்பமாகும் 06 மாத காலப்பகுதிக்காக, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்டங்கள் அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைவாக செல்லுபடியுடையதாதல் வேண்டும்.

2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட்டு 2019 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 10 ஆந் திகதிய 2140/20 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் ஊடாக உழுந்து (எச். எஸ். குறியீடு 0713.31.22 மற்றும் 0713.31.29) சம்பந்தமாக வெளியிடப்பட்ட உத்தரவுகள் 2020 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 08 ஆந் திகதியிலிருந்து இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.

மஹிந்த ராஜபக்ஷ,
நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01,
2020, மாச்சு 07.

**அட்டவணை**

| I ஆம் நிரல் | | | | II ஆம் நிரல் |
|---|---|---|---|---|
| வியாபாரப் பண்ட இனம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| இல. | எச்.எஸ். தலைப்பு | எச்.எஸ். குறியீடு | விவரணம் | |
| 01 | 03.03 | 0303.54 | மெகரல் எனும் மீன் வகை (ஸ்கொம்பர் ஸ்கொம்ரஸ், ஸ்கொம்பர் அவுஸ்ராலாசியஸ், ஸ்கொம்பர் ஜபோனிகஸ்) | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 6.00 |
| 02 | 07.13 | 0713.31.22 | உழுந்து : தோல் நீக்கப்பட்டவை, பிளக்கப்பட்டவை அல்லது பிளக்கப்படாதவை | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 300.00 |
| | | 0713.31.29 | உழுந்து : பிற | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 200.00 |
| 03 | | 0713.35.90 | பிற - கௌபி | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 70.00 |
| 04 | 10.08 | 1008.21.10 | விதை - குரக்கன் (எலியுசைன் குரக்கானா இன) | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 70.00 |
| | | 1008.21.90 | விதை - பிற (மிலட்) | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 70.00 |
| | | 1008.29.10 | பிற - குரக்கன் (எலியுசைன் குரக்கானா இன) | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 70.00 |
| | | 1008.29.90 | பிற (மிலட்) | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 70.00 |

03-904

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.